ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

மூன்றாம்பத்து

---

9-ஆம் திருமொழி - என்னாதன்

________*________

* என்னாதன்தேவிக்கு அன்றுஇன்பப்பூஈயாதாள் *
தன்னாதன்காணவே தண்பூமரத்தினை *
வன்னாதப்புள்ளால் வலியப்பறித்திட்ட *
என்னாதன்வன்மையைப்பாடிப்பற எம்பிரான்வன்மையைப்பாடிப்பற. (1)

என்வில்வலிகண்டுபோவென்று எதிர்வந்தான் *
தனவில்லினோடும் தவத்தைஎதிர்வாங்கி *
முன்வில்வலித்து முதுபெண்ணுயிருண்டான் *
தன்வில்லின்வன்மையைப்பாடிப்பற தாசரதிதன்மையைப்பாடிப்பற (2)

உருப்பிணிநங்கையைத் தேரேற்றிக்கொண்டு *
விருப்புற்றங்கேக விரைந்துஎதிர்வாங்கி *
முன்வில்வலித்து முதுபெண்ணுவிருண்டான் *
தன்வில்லின்வன்மையைப்பாடிப்பற தாசரதிதன்மையைப்பாடிப்பற (3)

மாற்றுத்தாய்சென்று வனம்போகேயென்றிட *
ஈற்றுத்தாய்பிந்தொடர்ந்து எம்பிரான்! என்றுஅழ *
கூற்றுத்தாய்சொல்லக் கொடியவனம்போன *
சீற்றமிலாதானைப்பாடிப்பற சீதைமணாளனைப்பாடிப்பற. (4)

பஞ்சவர்தூதனாய்ப் பாரதம்கைசெய்து *
நஞ்சுமிழ்நாகம்கிடந்த நல்பொய்கைபுக்கு *
அஞ்சப்பணத்தின்மேல் பாய்ந்திட்டுஅருள்செய்த *
அஞ்சனவண்ணனைப்பாடிப்பற அசோதைதன்சிங்கத்தைப்பாடிப்ப (5)

முடியொன்றி மூவுலகங்களுமாண்டு * உன்
அடியேற்கருளென்று அவன்பிந்தொடர்ந்த *
படியில்குணத்துப் பாத்தம்பிக்கு * அன்று
அடிநிலையீந்தானைப்பாடிப்பற அயோத்தியர்கோமானைப்பாடிப்பற. (6)

காளியன்பொய்கை கலங்கப்பாய்ந்திட்டு * அவன்
நீள்முடியைந்திலும் நின்றுநடம்செய்து *
மீளஅவனுக்கு அருள்செய்தவித்தகன் *

தோள்வலிவீரமேபாடிப்பற தூமணிவண்ணனைப்பாடிப்பற. (7)

தார்க்குஇளந்தம்பிக்கு அரசீந்து * தண்டகம்
நூற்றவள் சொல்கொண்டுபோகி * நுடங்கிடைச்
சூர்ப்பணகாவைச் செவியொடுமூக்கு * அவள்
ஆர்க்கஅரிந்தானைப்பாடிப்பற அயொத்திக்கரசனைப்பாடிப்பற. (8)

மாயச்சகடமுதைத்து மருதிறுத்து *
ஆயர்களோடுபோய் ஆநிரைகாத்து * அணி
வேயின்குழலூதி வித்தகனாய்நின்ற *
ஆயர்களேற்றினைப்பாடிப்பற ஆநிரைமேய்த்தானைப்பாடிப்பற. (9)

காரார்கடலையடைத்திட்டு இலங்கைபுக்கு *
ஓராதான்பொன்முடி ஒன்பதோடொன்றையும் *
@ நேராஅவந்தம்பிக்கே நீளரசீந்த *
ஆராவமுதனைப்பாடிப்பற அயோத்தியவேந்தனைப்பாடிப்பற. (10)

* நந்தன்மதலையைக் காகுத்தனைநவின்று *
உந்திபறந்த ஒளியிழையார்கள்சொல் *
செந்தமிழ்த்தன்புதுவை விட்டுசித்தன்சொல் *
ஔந்தினோடைந்தும்வல்லார்க்கு அல்லலில்லையே. (11)

அடிவரவு : என்னாதன் என்வில் உருப்பிணி மாற்று பஞ்சவர் முடி காவியன் தார்க்கு மாயம் காரார் நந்தன் தெறிந்த.

@நேரா - அறுத்துப்பொகட்டு